**FSC**

Register No. | | | | | | | | |

**4966–21**

(For the candidates admitted from 2009 – 2010 to 2016 – 2017)

B.A.B.L./B.A.LL.B DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.

(Five – year Regular Course)

Fourth Year – Seventh Semester

ENVIRONMENTAL LAWS

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding Six pages each.

ஒவ்வொரு வினாவிற்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. Critically examine the role played by social movements in the protections of environment.

   சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சமூக இயக்கங்களின் பங்கினை கூர்ந்தாய்வு செய்க.

2. Define environment and enumerate the significance of the Environmental (Protection) Act, 1986.

   சுற்றுப்புறம் வரையறு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம், 1986–ன் சிறப்பம்சத்தினை வகைப்படுத்துக.

3. "Right to wholesome environment is a fundamental right"? Evaluate.

   "முழுமையான சுற்றுப்புற சூழ்நிலைக்கான உரிமையானது ஒரு அடிப்படை உரிமையாகும்" எடுத்துரைக்க.

4. Explain the Penalties and Procedure laid down in Air (Prevention and Control of Pollution) Act, 1981.

   காற்று மாசுபடுதல் (தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு) சட்டம், 1981ல் உள்ள தண்டனைகள் மற்றும் நடைமுறைகளை விளக்குக.

5. Define Sustainable Development and enumerate the importance of Sustainable Development goals, 2015.

   நின்று நீடித்து நிலைக்கக்கூடிய வளர்ச்சியை வரையறு மற்றும் நின்று நீடித்து நிலைக்கக்கூடிய வளர்ச்சி இலக்குகள் 2015-ன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each :

பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Agenda 21

நினைவுக் குறிப்பு 21.

(b) Bio–medical waste

மருத்துவ உயிரி கழிவு

(c) Sundarlal Bahuguna

சுந்தர்லால் பகுகுணா

(d) Green Tribunal

பசுமைத் தீர்ப்பாயம்

(e) Inter generational equity

தலைமுறைகளுக்கிடையேயான தகைமை நெறி

(f) Mont Real protocol

மாண்டிரியல் ஒப்பந்தம்

(g) Prevention of cruelty to Animals act, 1960.

விலங்குகள் மீதான வன்செயல் தடுப்புச் சட்டம், 1960.

(h) M.C. Mehta v. Kamal Nath

எம். சி. மேத்தா எதிர். கமல் நாத்

(i) National Environmental Engineering Research Institute (NEERI)

தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம்

(j) Goa foundation v. The Konkan railway

கோவா பவுண்டேஷன் எதிர். கொங்கன் இரயில்வே

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The Government of Odisha sanctioned a thermal power project along the coastal area that the project need to be stopped. Is it sustainable? Decide.

கடல் எல்லையோரப் பகுதியில் வெப்பஞ்சார்ந்த மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு ஒரிஸ்ஸா அரசு அனுமதி வழங்கியது. இதற்கு மறுப்பு தெரிவித்து அத்திட்டத்தை உடனடியாக நிறுத்தும்படி உள்ளூர் மீனவர்கள் கோரிக்கை வைத்தனர். இது நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்கவும்.

8. The Government of kerala decided to long plastic roads in all cities. To lay and maintain roads the government proposed to use 70 lakhs metric tons of plastic for every year. A public interest litigation was filed on the ground that it would be environmentally harmful. Decide.

கேரள அரசானது நெகிழியை வைத்து அனைத்து நகரங்களிலும் ரோடு போட முடிவு செய்து ஒவ்வொரு ஆண்டும் ரோடு வேலைக்காக 70 இலட்சம் மெட்ரிக் டன் நெகிழியை பயன்படுத்த உத்தேசித்தது. இந்த முடிவானது சுற்றுப்புற சீர்கேட்டினை ஏற்படுத்தும் என ஆட்சேபனை செய்து பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தீர்மானிக்க.

9. ABC and co., a manufacturers of dyes let its untreated effluents in the nearby stream. The residents of the area objected and filed a petition praying for the closure of the industry. Decide.

சாயம் தயாரிக்கும் ABC and co., யானது தனது சுத்திகரிக்கப்படாத கழிவுகளை அருகிலிருந்த நீரோடையில் விட்டது. அப்பகுதி மக்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து மற்றும் அத்தொழிற்சாலையை மூட வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்கிட்டனர். தீர்மானிக்கவும்.

10. A municipality granted a licence to run flour mill in hospital zone. Mr. Riyanth a fourth year student filed a public interest litigation for cancelling the licence. The municipality contended that the issuance of licence is administrative matters and Courts cannot interfere. Decide.

மருத்துவமனை பகுதியில் மாவுமில் வைத்து நடத்திட ஒரு நகராட்சி அனுமதி வழங்கியது. அந்த அனுமதியை திரு. ரியாந்த் என்ற நான்காமாண்டு மாணவர் ரத்து செய்யக் கோரி ஒரு பொது நல வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார். இது நிர்வாக செயல்கள் இதில் நிதிமன்றம் தலையிட முடியாது என நகராட்சி வாதிட்டது. தீர்மானிக்க.

11. The leakage of Poisonous gas from a foreign registered company in Bhopal claimed lives of more than 2,000 residents and 50,000 people were injured. The parliament passed a law to take over and pursue all the claims of the victims. A write was filed challenging the validity of the law. Is it maintainable? Decide.

வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலையிலிருந்து விஷவாயு கசிவு ஏற்பட்டதில் போபால் பகுதியில் 2,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் மற்றும் 50,000 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். அனைவரின் சார்பாக வழக்குத் தொடுக்கும் உரிமையை சட்டமியற்றி பாராளுமன்றம் எடுத்துக் கொண்டது. இச்சட்டத்தின் செல்லு தன்மையை கோரி ஒரு நீதிப்பேராணை தாக்கல் செய்யப்பட்டது. இது நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்கவும்.

12. Dr. Dayan a marine biologist converted his agricultural land into shrimp culture farm and the local residents objected to this on the ground that the shrimp culture damaged the sub-soil. Dr. Dayan contended that there was no law in force in that area to restrict shrimp culture operations. Decide.

மருத்துவர் தயான் என்பவர் கடல் உயிரியலாளர், தனது விவசாய நிலத்தினை மாற்றி இறால் பண்ணை வைத்தது நிலத்தின் அடிமண் பாதிக்கப்படும் என அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதற்கு மருத்துவர் தயான் தனது மறுப்புரையில் அந்த விவசாய நிலத்தில் இறால் பண்ணை அமைக்க கூடாது என்று எந்த சட்ட விதியும் இல்லை என்று வாதிட்டார். தீர்மானிக்கவும்.

————————